







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 8 19.02.2025




**ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:**

# உள்ளே....

## படிக்க வேண்டிய உபதேசங்கள்

1. முக்கியமான இருபது அறிவுரைகள்
2. அவசியம் செய்யவேண்டியவை
3. ஒன்பது வகையான பக்தி
4. உபநிஷத்தில் ஒரு விஷயம்
5. ஸ்ரீதேசிகோபதேசங்கள் -1

---



# 1.ஸ்ரீ.உ.வே. மஹாவித்வான் பண்டிதபூஷணம் பகவத் விஷயம் சேட்டலூர் ந்ருஸிம்ஹாசார்யர் இயற்றிய ஸ்ரீ ஸத்ஸம்ப்ரதாய விவேகம்

இந்த உயர்ந்து கிரந்தத்திலிருந்து--- திருமலை சதுர்வேத சதக்ரது நாவல்பாக்கம் ஸ்ரீ.உ.வே. யஜ்ஞவராஹ தாதாசார்ய ஸ்வாமியின் அணிந்துரையிலிருந்து-- சில பகுதிகள்

## முக்கியமான இருபது அறிவுரைகள்

1.ஸ்ரீவைஷ்ணவர்களின் திரளைக் கண்ட மாத்திரத்தால் பாவங்கள் தொலையும்.
2.ஸ்ரீவைஷ்ணவ ஜன்மம் துர்லபமானது என்று அறிந்து அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்
3.பகவத கடாக்ஷத்துக்கு மஹிமை அதிகம்.
4. அவைஷ்ணவ ஜன்மம் நிந்திக்கத் தக்கது.
5. திருமண்காப்பும் சங்க - சக்கர- சின்னங்களும் வெளி அடையாளங்களானாலும், முக்கியமானவை.
6. வேஷ மாத்ரத்தால் வைஷ்ணவர்களான போலி பாகவதர்களையும் போலித்தனம் வெளியாகும் வரை நாம் ஆதரித்தாகவேண்டும்.
7. ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம் அதிப்ராசீனம்; விசிஷ்டாத்வைதம் என்றும் ராமானுஜ ஸித்தாந்தம் என்றும் பெயர்கள் ஆயிரம் வருஷங்களுக்கு முன் இல்லாவிடினும், நவீனதா-ப்ரமம் வேண்டாம்.
8. நாம் அவசியம் அறியவேண்டிய விஷயங்கள் மூன்று: தத்வம், ஹிதம், புருஷார்த்தம், என்பவை.
9. ப்ரபத்தி ஹிததமம்.
10. நம் ஸம்ப்ரதாயத்துக்குள்ளே ஸ்வல்ப வ்யத்யாஸத்தாலே தோன்றும் பேதங்களைப் பெரிதுபடுத்தக்கூடாது.
11. பக்தி ஸ்வரூப விருத்தமன்று.
12. ப்ரபத்தி அவச்யம் அனுஷ்டிக்க வேண்டியது.
13.லக்ஷ்மிக்கு உபாயத்வமும் உண்டு. ஆகையால், ஆச்ரயண வேளையிலும் ஒரு மிதுனமே நமக்கு உத்தேச்யம்.
14.வர்ணாச்ரம தர்மங்களை ஒரு போதும் விடலாகாது.
15. ஜாதி நசியாதானாலும், எந்த ஜாதியானாலும் பாகவதர்களை பஹுமானிக்க வேண்டும்.
16.பெரியோர்களின் வசனத்துக்கு அவர்களின் அனுஷ்டானத்தை விட ப்ராமாண்யம் அதிகம்.
17.ப்ராஹ்மண அப்ராஹ்மணத்வேஷங்களை வைஷ்ணவர்கள் பாராட்டக்கூடாது.
18.வைஷ்ணவ ஸமாகமம் (சேர்த்தி) உயர்ந்தது.
19.நமக்குள் (இரு கலையினருக்குள்)ஒற்றுமை முக்கியம். ஏகோபித்து ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்வோமாக.
20. வைமனஸ்யத்துக்கு ஹேதுவான அஜ்ஞான அஸூயைகளை ஒழிக்க வேண்டும்.

# 2.அவசியம் செய்யவேண்டியவை

**கலியுகத்தில் நாம் கடைதேறுவதற்குக் கீழ்க்கண்ட எட்டு நியமங் களையாவது குறைந்த பக்ஷமாகக் கடைப் பிடிக்க வேண்டுமென்று பரம பாகவதரான நாராயண பட்டாத்ரி பாகவத ஸாரமான நாராயணீயத்தில் சொல்லு வதாவது:**

**"கீதா கங்காச காயத்ர்யபி துலஸிகா**
**கோபிகாசந்தநம் தத்**
**ஸாலக்ராமாபிபூஜா பரபுருஷ**
**ததைகாதசீ நாமவர்ணா:I**
**ஏதாந்யஷ்டாந்யயத்நாதபி கலியுகே**
**த்வத்ப்ரஸாதாய பூயாத்" II**

**அதாவது,**

**1. பகவத் கீதா பாராயணம்**
**2. கங்கா தீர்த்த ஸ்நான பானங்கள்**
**3.காயத்ரீ ஜபம்**
**4. துலஸீ பூஜை**
**5. திலகதாரணம்**
**6. ஸாளக்ராம பூஜை**
**7. ஏகாதசி வ்ரதம்**
**8. பகவந்நாம ஸங்கீர்த்தனம்.**

**இந்த எட்டு நியமங்களையாவது விடாமல் அனுஷ்டிக்க வேண்டும்.**



# 3. ஒன்பது வகையான பக்தி

துளசிதாசர் அவருடைய இராமாயணத்தில் ராமர் சபரிக்குச் சொல்வதாக இருக்கும் ஒன்பது வகையான பக்தி.

1. சத்சங்கம்.

2. என் கதைகளைக் கேட்க ஆசை.

3. குருசேவை.

4. என் குணங்களைக் கீர்த்தனம் செய்தல்.

5. என் நாமத்தைச் சொல்லுதல்.


6. புலனடக்கம்.

7. எல்லா உயிரினங்களையும் நானாகப் பார்த்தல்.

8. கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைதல், கனவில் கூடப் பிறர் குற்றங்களைக் காணாதிருத்தல்.

9. சுகம், துக்கம் இரண்டையும் சமமாகப் பாவித்தல்.

இத்தனையையும் சொல்லிவிட்டு இராமர், "இந்த ஒன்பது பக்திகளில் ஏதாவது ஒன்றைப் பின்பற்றினாலும் போதும், அவன் எனக்கு விருப்பமானவனே" என்று சொல்கிறார்.



# 4. உபநிஷத்தில் ஒரு விஷயம்


"அப்பா! எனக்கு ப்ரம்ம தத்வம் சொல்லுங்கள்" என்று பிள்ளை கேட்கிறான்! "அது அவ்வளவு சுலபமன்று. எளிதில் சொல்லி விடமுடியாது" என்கிறார் தகப்பனார்! "அப்ப நான் என்ன பண்ணுவது என்று கேட்கின்றான் தனயன்! "போய் தபஸ் பண்ணு" என்கிறார் தந்தை! தபஸ் பண்ணிவிட்டு வந்து "தெரியவில்லையே" என்கிறான்!

"மறுபடியும் போய் தபஸ் பண்ணு" என்கிறார் தகப்பனார்! இப்படி மறுபடி மறுபடி தபஸ் பண்ணினாலும் ப்ரும்ம ஜ்ஞானம் என்பது அவ்வளவு எளிதில் கிடைத்துவிடாது! உபாயத்தின் தன்மையையும் பலனையும் வைத்துத்தான். பெற்ற வஸ்துவின் பெருமையை உணரமுடியும்! இவ்வளவு உயர்ந்ததான ப்ரும்ம ஜ்ஞானத்தைப் பெற இவ்வளவு ப்ரயத்னம் பண்ணவேணும் என்னும்போதுதான் அந்த ஜ்ஞானத்தின் பெருமையை நம்மால் உணரமுடிகிறது!

கேட்கும்போது புரிகிறதுபோல் இருக்கிறது! அதன் பிறகு மீண்டும் பழையபடி புரியாத நிலைதான்! பரப்ரும்மத்தை ப்ரத்யக்ஷமாகப் பார்த்துவிட்டால் மனதில் நின்றுவிடும்! அது முடியுமா? 'மேகங்கள் ஸமுத்ர ஜலத்தை எடுத்துக் கொண்டு மேலே போய் அதன் உப்புத்தன்மையை நீக்கிவிட்டு நாம் அருந்துவதற்கு ஏற்ற மழைத் தண்ணீராக நமக்குத் தருவதுபோல் இந்த சாஸ்த்ர ஜ்ஞானத்தை நமக்குக் கொடுத்தவர்கள் ஆழ்வார்கள்' என்றால் அதில் பூர்ணமான வெற்றியைப் பெற்றவள் ஆண்டாள் என்பது ஸத்யம்! ஜீவாத்மாக்களை பெருமாளிடம் நெருக்கமாகக் கொண்டு சேர்ப்பது எப்படி என்ற கேள்வி ஆழ்வார்களிடம் எழுந்தது!

தாயார் பார்த்தாள், இதற்காகவே ஆண்டாளாக அவதரித்துத் தம்மை அந்த கோஷ்டியில் இணைத்துக்கொண்டாள்!





சூடிக்கொடுத்த நாச்சியார் – உத்ஸவர்

# 5. ஸ்ரீதேசிகோபதேசங்கள் -1

1.நீதிவழி நடக்கும் அரசன் தன் பிள்ளையே குற்றவாளியாக இருந்தாலும் தண்டனை அளிக்கிறான். ஆனால் பொது ஜனங்களைப் போன்று கடுமையான தண்டனையாக இல்லாமல் ராஜகுமாரனுக்குக் குறைவான தண்டனை அளிப்பது ராஜநீதி. அது போன்று சரணாகதி செய்த பின்பு, நாம் தெரிந்து செய்யும் அபராதங்களுக்கு, பகவான் எளிய தண்டனை அளித்து, மோக்ஷத்தைத் தடையில்லாமல் பெறுவதற்கு உதவி செய்து, நம்மை ஏற்றுக் கொள்கிறான்.

2.நற்பண்புகள் உண்டாக அவரவர் வளரும் சூழ்நிலையே காரணம். ஆச்ரமத்தில் கிளி வளர்ந்தது என்றால் நல்ல விஷயங்களை அறியும். மது, மாமிச, சூதாட்ட விடுதியில் கிளி வளர்ந்தது என்றால் அது எப்படி வளரும் ?

3. ஸம்ஸாரம் என்னும் பெரும் ஸமுத்திரத்தில், நம் முயற்சியினால் எளிதில் கடக்க முடியாது.

விஷ்ணு(ஸ்ரீமன் நாராயணன்) என்னும் படகின் துணை கொண்டே நம்மால் கடக்க இயலும். இதன் மாலுமி ஆசார்யன்.

4. உலகில் அதர்மம் தலை எடுக்கும் போது, பகவான் பல்வேறு திருமேனிகளுடன் பற்பல அவதாரங்களைச் செய்து உலகில் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுகிறான்.

5. ஒரு ஜீவன் பிறக்கும்போது அவன் கருவினில் ஸ்ரீமந் நாராயணனின் கடாக்ஷம் பெற்றால், பிறந்த பின்னர் மோக்ஷத்திற்கான முயற்சிகளை செய்வான். அதே சமயம் கருவினில் ஸ்ரீமந்நாராயணனை தவிர்த்து, வேறு தெய்வங்களால் பார்க்கப்பட்டால், அவனுக்கு மோக்ஷம் கிடையாது.

6. குள்ளமான ஒருவன் தானே பழங்களை பறிக்க முடியாத காரணத்தால் உயரமான ஒருவனை பறித்துத் தரச் சொல்லி பழங்களைச் சாப்பிடுகிறான். அது போல நாம் பகவானின் துணை கொண்டு அவனிடம் சரணடைந்து மோக்ஷம் பெற முயல வேண்டும்.

7. மோக்ஷம் அடைய இரண்டே வழிகள் தான்.

1. பக்தியோகம் எனப்படும் கடினமான வழி. இதைச் செய்ய பல நியமங்கள் உண்டு.

2. மற்றொன்று ப்ரபத்தி என்னும் சரணாகதி. சரணாகதி செய்ய முழு நம்பிக்கை என்னும் “மஹா விஸ்வாஸமே” போதுமானது. இதற்கு எல்லோருமே தகுதி பெற்றவர்கள்.

எனவே, எளிதான சரணாகதியை செய்து இக்கலியுகத்தில் சுலபமாக மோக்ஷம் அடையலாம்.

**************************************************************

*************************************************